Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 17, 2023

புதன்கிழமை மே 17, 2023 | ஒளி: 08 கதிர்: 272 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE

## வலுப்பெறுகிறது ரூபாயின் பெறுமதி



இலங்கை மத்திய வங்கியால் செவ்வாய்க்கிழமை (16) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எவ்வித பிளவும் இல்லை

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எந்தப் பிளவும் இல்லை என்றும் தற்போதைய அரசாங்கத்தை மாற்றுவதற்கு கடத்தல்காரர்கள் விரும்புவதாகவும் அரசை சீர்குலைக்க பாடுபடும் அனைவரையும் பயங்கரவாதிகளுக்கு சமமாக கையாள வேண்டும் என்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### நாவாந்துறையில் சிறுவர் கடத்தல் முயற்சி

## நையப்புடைத்து மடக்கிப் பிடிப்பு

**எம்.றொசாந்த்**

யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில் சிறுவர்களை கடத்த முயன்றார் என அப்பகுதி மக்களால் நபர் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டு, யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நாவாந்துறை பகுதியில் செவ்வாய்க்கிழமை (16) காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரிடம் மக்களால் ஒப்படைக்கப்பட்ட நபரை பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்ச்சி P2

### இனப்படுகொலை,போர்க் குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி

# நீதி கிடைக்க செய்வோம்




**நிதர்ஷன் வினோத்**

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை, போர்க் குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி, எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகமுமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை வாரத்தில், எம்.கே சிவாஜிலிங்கத்தின் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (16) முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலையை நினைவு கூர்ந்து, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சியும் வழங்கப்பட்டது.

அங்கு மேலும் உரையாற்றிய அவர், “இலங்கையின் அரச படைகளாலும், சிங்களக் காடையர் குழுக்களாலும் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் பொதுமக்களுக்கு எமது அஞ்சலிகள்.

தொடர்ச்சி P2

## ஜெரோமின் கருத்துக்கு திருச்சபை கண்டனம்

### ஜெரோம் பாதிரியார் அல்ல என்றும் தெரிவிப்பு நாட்டை விட்டு தப்பிவிட்டார் என தகவல்



மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் ஜெரோம் பெர்னாண்டோ வெளியிட்ட கருத்துகளை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்த கத்தோலிக்க திருச்சபை, ஜெரோம் பெர்னாண்டோ ஒரு கத்தோலிக்க பாதிரியார் அல்ல என்று செவ்வாய்க்கிழமை (16) தெரிவித்தது.

தொடர்ச்சி P2



## நாகபூசணி அம்மன் சிலை: வழக்கு தள்ளுபடி

**நிதர்ஷன் வினோத்**

யாழ்ப்பாணம், பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மன் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கை, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை (16) விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த வழக்கை தொடர பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கஞ்சி குடித்த இருவருக்கு சிக்கல்

**மு.தமிழ்ச்செல்வன்**



யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி

முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறும் நிகழ்வு திருகோணமலை தம்பலகாமம் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்றது.

எப். முபாரக்

## பறந்தவருக்கு பயணத்தடை

மதங்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்திருந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் செவ்வாய்(16) காலையிலேயே நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## டொக்டர் ஷாபியின் கைது நியாயமானது

### உயர்நீதிமன்றம் அறிவித்தது

குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் மொஹமட் ஷாபி ஷிஹாப்தீனை கைது செய்வதற்கு நியாயமான காரணம் இருந்ததால், அவர் கைது செய்யப்பட்டிருப்பது நியாயமானது என்றும் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை என்றும் உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித் கே மலல்கொட அறிவித்தார்.

தொடர்ச்சி P2



## 2023இல் முதல் அணு மின்நிலையம்

அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிட்டதற்கு அமைய நடைபெற்றால் ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடனான முதலாவது அணு மின்நிலையத்தை 2032 இல் இலங்கையில் நிர்மாணிக்க முடியும் என்று வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் இலங்கை அணுசக்தி சபை தெரிவித்தது.

தொடர்ச்சி P2

## ரூ.15 ஆயிரத்துக்கு 15 முதல் பண்டி உரம்

பண்டி உரம் என்று அழைக்கப்படும் எம்ஓபி (பொட்டாசியம் முரியேட்டு) உரத்தின் விலையை 4,500 ரூபாயால் குறைப்பதற்கு விலைக்குழு அனுமதி வழங்கியுள்ளது என்றும் 15ஆம் திகதிமுதல் 15 ஆயிரம் ரூபாய் என்ற விலைக்கு உரமூடையொன்றை கொள்வனவு செய்ய முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

### யூனான் மாகாண – இலங்கை

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அங்கிகாரம்

சீனா மக்கள் குடியரசின் யூனான் மாகாண மக்கள் குடியரசின் வெளிவிவகாரங்கள் அலுவலகத்திற்கும், இலங்கை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## புதியவர்கள் இருவரை நியமித்தார் ஜனாதிபதி

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு புதிய தவிசாளரையும் பாராளுமன்றத்துக்கு புதிய செயலாளர் நாயகத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் புதிய தலைவரக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில், பாராளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்கு தற்போதைய தலைமை அதிகாரியும் பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமுமான திருமதி கே.ஏ ரோஹணதீரவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### பெருந்தோட்ட மக்களை உள்வாங்காமல்

# அஸ்வெசும திட்டத்துக்கு உலகவங்கி உதவாது

### மனோ கணேசன் குழுவினருக்கு உலக வங்கி உறுதி



பெருந்தோட்ட மக்களை அஸ்வெசும திட்டத்துக்கு இணைக்காவிடின் இத்திட்டதை நாம் முன்னெடுக்க மாட்டோம் என்ற உறுதிமொழியை உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் செர்வோஸ், மனோ கணேசன் எம்பி தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவிடம் தெரிவித்தார்.

மனோ கணேசன் எம்பியுடன், தமுகூ நுவரெலியா எம்பி உதயகுமார், கண்டி எம்பி வேலுகுமார் மற்றும் மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர் கௌதம் பாலசந்திரன் ஆகியோரும் உலக வங்கி குழுவினரை, கொழும்பில் செவ்வாய்க்கிழமை (16) சந்தித்தனர்.

இதன்போது, “முந்தைய சமுர்த்தி திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை சேர்த்து கொள்வதில் குறைபாடு நிலவியதாக நாம் அறிந்துள்ளோம். இது பழைய சமுர்த்தி திட்டம் அல்ல. இது நாம் நேரடியாக பங்கு கொள்ளும் திட்டம். பெருந்தோட்ட குடும்பங்களுக்கு நியாயமான வாய்ப்புகளை வழங்காமல், உலக வங்கி உதவியுடனான நலிவுற்ற மக்களுக்கான இந்த மாதாந்த கொடுப்பனவு இத்திட்டதை நாம் எக்காரணம் கொண்டும் முன்னெடுக்க மாட்டோம்” என்று ஹடாட் செர்வோஸ் உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு உரையாடல் தொடர்பில் ஊடகங்களுடன் உரையாடிய மனோ கணேசன் எம்பி கூறியதாவது,

“அரசாங்கம் உலக வங்கியின் நிதி உதவியுடன் இலங்கையில் வாழும் வறிய நலிவுற்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் நிதி கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை முன்னெடுக்க உள்ளது.

முந்தைய சமுர்த்தி திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை சேர்த்து கொள்வதில் குறைபாடு நிலவியதை போல் இந்தத் திட்டத்தில் பெருந்தோட்ட குடும்பங்களை புறந்தள்ள இடம் கொடுக்க மாட்டோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்றத்தில் தெளிவாக கூறி விட்டது. இந்த நிலைபாட்டை நான் நேரடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கூறிவிட்டேன்.

இது தொடர்பில் கொழும்பு உலக வங்கி அலுவலகத்தில், உலக வங்கியின் இலங்கைக்கான நாட்டு பணிப்பாளர் பாரிஸ் ஹடாட் செர்வோஸ் குழுவினரை, தமுகூ சார்பாக நானும், எம்பிகள் உதயகுமார், வேலுகுமார் மற்றும் மலையக சிவில் செயற்பாட்டாளர் கௌதம் பாலசந்திரன் ஆகியோரும் சந்தித்து தீர்க்கமாக கலந்துரையாடினோம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நையப்புடைத்து மடக்கிப் பிடிப்பு

மக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என விசாரணைகளின் ஊடாக தெரியவருகின்றது.

குறித்த நபர் காணாமல் போனமை தொடர்பாக குடும்பத்தினரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஏற்கெனவே முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாகபூசணி அம்மன் சிலை: வழக்கு தள்ளுபடி

அந்த வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கிடும் தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்கு உட்படுத்தி இந்து அமைப்புக்கள் சார்பில் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, இந்து அமைப்புகள் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகளும் முன்னிலையாகி கடந்த ஏப்ரல் 18ம் திகதி வழக்கு விசாரணையின்போது நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த வழக்கை தள்ளுபடி செய்தது.

## ரூ.15 ஆயிரத்துக்கு 15 முதல் பண்டி உரம்

கடந்த பருவத்தில் அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் 50 கிலோ கிராம் நிறையுடைய பண்டி உர மூடையொன்றை தலா 19,500 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்ததுடன், தனியார் நிறுவனங்கள் 22,500 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்தது.

இந்நிலையில், அடுத்த போகத்தில் விவசாய உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் பண்டி உரத்தின் விலையை 15 ஆயிரம் ரூபாவாகக் குறைப்பதற்கு தன்னால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு கடந்த 8ஆம் திகதி கூடிய விலைக்குழு அனுமதி வழங்கியதாக விவசாய அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அனைத்து கமநல சேவை மத்திய நிலையங்களிலும் பண்டி உரத்தை 15 ஆயிரம் ரூபாய் விலையில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நெற்செய்கைக்குத் தேவையான பண்டி உரங்களை உடனடியாக அனைத்து கமநல சேவை மத்திய நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளுமாறு விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## புதியவர்கள் இருவரை நியமித்தார் ஜனாதிபதி

தற்போதைய பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க பதவி விலகிய பின்னர், கே.ஏ.ரோஹணதீர பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டொக்டர் ஷாபியின்...

ஈஸ்டர் தாக்குதலுக்கு இரண்டு வாரங்களுக்குப் பின்னர் அவர் கைது செய்யப்பட்டதாகவும் 40 கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளை எப்படி சம்பாதித்தார் என்பதை வெளியிடாமல் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டமை நியாயமானது என்றும் நீதியரசர் அறிவித்தார்.

தான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்று கோரி டொக்டர் ஷாபி தாக்கல் செய்த மனு, நீதியரசர்களான விஜித் கே மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

அதன்போதே, நீதியரசர் விஜித் மலல்கொட மேற்குறிப்பிட்ட விடயங்களை அறிவித்ததுடன் மனுவை நிராகரிப்பதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்தது. குறித்த மனுவில், குருநாகல் பொலிஸ் நிலைய குற்றப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் புஷ்பலால், குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

# நீதி கிடைக்க செய்வோம்

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை, போர்க் குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வோம்.

தமிழினப் படுகொலைகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் ஈடுசெய் நீதி கிடைக்கவும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அரசியல் தீர்வைக் காண சுதந்திரத்துக்கான பொதுசன வாக்கெடுப்பு ஒன்றினை நடத்த வேண்டும்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்களும், 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் வாழ்ந்துவரும் பரம்பரையினரும் (புலம்பெயர் மக்களும் உட்பட) கலந்துகொள்ளும் வகையில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தைக் கோருகின்றோம்.

கட்டாயமாகக் காணாமல் போகச் செய்யப்பட்ட தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கிடைக்கச் செய்வோம்” என்றும் குறிப்பிட்டார்.

## மின்சார கட்டண குறைக்க முன்மொழிவு

மின்சார கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கை மற்றும் அமைச்சரவை முடிவுகளுக்கு இணங்க, கட்டண நிரப்புதல் விதிகளுக்கு இணங்க, ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் கட்டணங்களில் இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றங்களை வலியுறுத்தும் வகையில், திங்கட்கிழமை (15) முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

எனவே, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 மற்றும் ஜூலை 1 ஆகிய திகதிகளில் மின்சார விலைகள் மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது செலவு சார்ந்த விலை கட்டமைப்பை செயல்படுத்தும் முயற்சியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி தரவுகள் மற்றும் விற்பனை தரவுகள், எரிபொருள், நிலக்கரி மற்றும் இதர மூலப்பொருட்களின் விலை மற்றும் இந்த ஆண்டுக்கான மின்சார உற்பத்தித் திட்டம் மற்றும் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதாக, விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் கஞ்சான விஜேசேகர டுட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

மின் உற்பத்திக்கான செலவு தற்போது குறைந்துள்ளதாகவும் டீசல், பெற்றோல், நிலக்கரி போன்றவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், மின்சாரத் தேவையும் சுமார் 18 சதவீதத்தால் குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைவரத்தை கருத்தில் கொண்டு மின்சார கட்டணத்தை சுமார் 20 சதவீதத்தால் குறைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அங்கிகாரம்

அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

2022 மே மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை சீனக் குடியரசின் யூனான் மாகாண ஆளுநர் வன்(ங்) யூகோவின் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அதன்போது, சீனக் குடியரசின் யூனான் மாகாணக் குடியரசின் வெளிவிவகாரங்கள் அலுவலகத்துக்கும், இலங்கை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பரஸ்பர சுற்றுலா, பொருளாதாரம், சந்தை மற்றும் வர்த்தகம், கல்வி, சுற்றுலாத்துறை, விவசாயம், மனிதக் கலாசாரப் பரிமாற்றங்கள், மக்களுடைய வாழ்க்கைத்தரம் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளுக்காக இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஜெரோமின் கருத்துக்கு திருச்சபை கண்டனம்

ஜெரோம் பெர்னாண்டோ தனது பிரசங்கம் ஒன்றின் போது அண்மையில் வெளியிட்ட கருத்துகள் நாட்டில் மத சகவாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைவதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக கொழும்பு பேராயர்களின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ அடிகளார் தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அருட்தந்தை மேற்குறிப்பிட்ட விடயத்தைக் குறிப்பிட்டார். ஜெரோம் பெர்னாண்டோ ஒரு கத்தோலிக்க பாதிரியார் அல்ல என்றும் கத்தோலிக்க திருச்சபையுடன் எந்த வகையிலும் இணைக்கப்படவில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவரது கருத்துகள் மத சகவாழ்வு மற்றும் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்ற உண்மையை புறக்கணிக்க முடியாது என்றும் அவர் கூறினார். இந்நிலையில், பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு முன்னரே நாட்டை விட்டு தப்பி, சிங்கபூருக்குச் சென்றுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கஞ்சி குடித்த இருவருக்கு சிக்கல்

இதன் போது ஏ9 பிரதான வீதியில் பயணிப்பவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் வீதியில் பயணித்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதி போக்குவரத்து பொலிஸாரும் பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கிய முள்ளிவாய்க்கால் கஞ்சியினை பெற்று குடித்தனர். வீதி போக்குவரத்து பொலிஸார் முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்தன.

இதனை தொடர்ந்தே குறித்த இரண்டு பொலிஸார் மீதும் விசாரணையை மேற்கொள்ளுமாறு கொழும்பிலிருந்து தகவல் வழங்கப்பட்டு அவர்களுக்கு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## 2023இல் முதல்...

பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் செவ்வாய்க்கிழமை (16) வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை அணுசக்தி சபையின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தலைமையில் அண்மையில் (09) பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த விடயம் புலப்பட்டது. ஒட்டு வேலை மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட துறையில் நிபுணர்களை இலங்கையில் உருவாக்குவது தொடர்பில் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கொரியா உள்ளிட்ட நாடுகளில் இத்துறை சார்ந்த நிபுணர்களுக்கு பாரியளவு கேள்வி உள்ளதாகவும், இலங்கையில் இத்துறையில் முறையான அங்கிகாரத்துடன் பயிற்சிபெற்ற நிபுணர்களை உருவாக்குவதற்கு உரிய பொறிமுறையொன்றின் அவசியம் தொடர்பில் குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். இந்தத் துறை சார்ந்த ஏற்கெனவே தொழில் அனுவபம் உள்ளவர்களுக்கும், துறைக்குள் பிரவேசிப்பவர்களுக்கும் பயிற்சி வழங்கி அங்கிகாரம் வழங்கும் முறை சபையின் கீழ் இயங்கும் பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எனினும், இந்தப் பயிற்சி தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் சரியான விழிப்புணர்வு இல்லை என்பதால் அதற்கான ஒரு திட்டத்தை தயாரித்து இந்தப் பயிற்சிக்கு அதிகளவில் புதியவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது .

## வலுப்பெறுகிறது ரூபாயின் பெறுமதி

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 305 ரூபாய் 43 சதமாக குறைந்துள்ளதுடன் விற்பனை விலை 318 ரூபாய் 79 சதமாக பதிவாகியுள்ளது.

திங்கட்கிழமை (15) டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 306 ரூபாய் 18 சதமாகவும் விற்பனை விலை 319 ரூபாய் 96 சதமாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை (11) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 308 ரூபாய் 66 சதமாகவும் விற்பனை விலை 322 ரூபாய் 70 சதமாகவும் பதிவாகியிருந்தது.

மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட நடுத்தர நாணயமாற்று வீதம் 316 ரூபாய் 67 சதமாகும் என்பதுடன் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதியன்று ரூபாயின் பெறுமதி 362 ரூபாய் 66 சதமாக இருந்தது.

மேலும், யூரோ, ஸ்ரேலிங் பவுண்ட் உள்ளிட்ட நாணயங்களுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதியும் கணிசமான அதிகரித்துள்ளது.

## ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எவ்வித பிளவும் இல்லை

கம்பஹா பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை (16) கலந்து கொண்ட போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாலில் என்ன கலந்துரையாடப்பட்டது? என்று வினவியதற்கு பதிலளித்த அமைச்சர்,

“அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் குறித்து கலந்துரையாடப்பட்டது. தற்போதுள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடி முன்மொழிவுகளை சமர்ப்பிக்க ஜனாதிபதி முன்மொழிந்தார்” என்றார்.

> **மஹிந்த போரில் வெற்றி பெற்றது போன்று ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவார் என்ற கருத்து நாட்டு மக்கள் மத்தியில் நிலவுகிறது**

தேர்தல் தொடர்பாக என்ன பேசப்பட்டது? என்ற கேள்விக்கு “கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது முன்னாள் எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய சட்டச் சிக்கலால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினையை தீர்க்க பிரதமருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது” என்று பதிளித்தார்.

மேலும், மாகாண சபைத் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படுமா? அல்லது ஜனாதிபதி தேர்தலா? என்று வினவப்பட்டது. “நாட்டுக்கு ஏற்ற வகையில் மக்கள் எதிர்பார்க்கும் தேர்தல் எதிர்காலத்தில் வரவுள்ளது” என்று அமைச்சர் கூறினார்.

தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவைக் கூட பாதுகாக்க முடியாத எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு சவால் விடுவது

> **ஆளுநர் பதவிகளை நியமிக்கும் போது அரசியல் பொறிமுறையைப் பற்றிய புரிதல் உள்ளவர்களையே பதவியில் அமர்த்த வேண்டும். மாகாண அமைச்சர்களின் பொறுப்பு ஆளுநர்களிடமே உள்ளது**

வேடிக்கையானது. தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவை வைத்துக்கொண்டால், எதிர்க்கட்சித் தலைவருக்கு ஹீரோவாக சவால் விடலாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆளுநர்களை நீக்க முடிவு செய்தது ஏன்? என்று கேள்வியெழுப்பப்பட்டது, அதற்கு பதிளித்த அவர், “ ஆளுநர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார்கள். தற்போதைய ஆளுநர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டவர்கள். தற்போதைய ஜனாதிபதி தாம் நம்பி செயற்படக்கூடிய குழுவொன்றை நியமித்து செயற்படுவார்” என்றார்.

“முன்னாள் ஜனாதிபதி படித்த மற்றும் புத்திசாலிகளை ஆளுநர் பதவிகளுக்கு நியமித்தார். அவர்களுடன் வேலை செய்ய முடியாதா? என்ற கேள்விக்கு

“அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை மக்கள் கூறுவார்கள். அந்தப் பதவிகளை நியமிக்கும் போது அரசியல் பொறிமுறையைப் பற்றிய புரிதல் உள்ளவர்களையே பதவியில் அமர்த்த வேண்டும். பொது மக்களுக்காக அரசு இயந்திரம் ஒருங்கிணைக்கப்படும் இடமாக ஆளுநர் பதவியை பார்க்கிறேன். மாகாண சபைகள் இல்லாத காரணத்தால் மாகாண அமைச்சர்களின் பொறுப்பு ஆளுநர்களிடமே உள்ளது” என்று பதில் வழங்கினார்.

மஹிந்த போரில் வெற்றி பெற்றது போன்று ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவார் என்ற கருத்து நாட்டு மக்கள் மத்தியில் நிலவுகிறது. ஜனாதிபதி சொல்வதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நயவஞ்சகர்கள் அதை ஏற்க மாட்டார்கள். தற்போதைய ஜனாதிபதிக்கு சல்யூட் அடிக்கலாம் என்று சரத் பொன்சேகா கூறுகிறார். இன்று ஜனாதிபதியைச் சுற்றி ஏராளமானோர் குவிந்துள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## அஸ்வெசும திட்டத்துக்கு உலகவங்கி உதவாது

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை வரை பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகலை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் வாழும் பெருந்தோட்ட குடும்பங்களுக்கு, இந்த மாதாந்த கொடுப்பனவு திட்டத்தில் இடம்பெற நியாயமான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் என இதை குறுக்க கூடாது. தோட்டங்களில் வேலை செய்தாலும், வெளியே வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும், பெருந்தோட்ட பிரதேசங்களில் வாழும் அனைத்து குடும்பங்களையும் இதில் சேர விண்ணப்பிக்க வாய்ப்பு வேண்டும். ஒரு வீட்டில் வசிக்கும், திருமணமான வெவ்வேறு குடும்பங்களையும் வெவ்வேறாக கணக்கெடுக்க வேண்டும் எனவும் நாம் கோரினோம். மேலும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு இதில் தேவையின்றி தலையிட இடம் கொடுக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளோம்.

அடுத்த சில தினங்களில், மேலும் சந்தித்து மேலதிக தகவல்களை பரிமாறிக்கொள்ள நாம் பரஸ்பரம் இணைங்கியுள்ளோம். இது நமது மக்கள் சார்பாக எமது முயற்சிகளுக்கு கிடைத்துள்ள சிறப்பான வெற்றியாகும்” என்றார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு

# பிதிர்கடன் செய்ய அழைப்பு



■ செ. கீதாஞ்சன்

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்தவர்களுக்கு பிதிர்கடன் செய்ய, அகில இலங்கை சைவத்தமிழ் மன்றம் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அகில இலங்கை சைவத்தமிழ் மன்றத்தின் தலைவர் நடராசா குணரத்தினம், செயலாளர் சிவப்பிரகாசம் சுரேஸ், செந்தமிழ் ஆகமர் அட்சகர் ஆகியோர் இணைந்து, முல்லைத்தீவு ஊடக அமைத்தில் செவ்வாய்க்கிழமை (16) ஊடக சந்திப்பை நிகழ்த்தி, இந்த அழைப்பை விடுத்துள்ளார்கள்.

உயிர்நீர்த்த உறவுகளின் உறவுகள், தங்களின் பிதிர்கடனை செய்துகொள்வதற்காக 18.05.23 அன்று காலை 7.00 மணியில் இருந்து முள்ளிவாய்க்கால் கப்பல் வீதி, கடற்கரையில் மண்டபங்கள் அமைக்கப்பட்டு, பிதிர்கடன் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் மறைகள் ஓதப்பட்டு, 15 தமிழ் அச்சகர்களால் பிதிர்கடன் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பிதிர்கடன் செய்யாதவர்கள், உயிரிழந்த ஆன்மாக்களுக்கு பிதிர்கடன் செய்து, உயிரிழந்த உறவுகளை திருப்திப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் தமிழின படுகொலை நினைவு

■ அ. அச்சுதன்



படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் தமிழின படுகொலை நினைவு நாள் மே -18 இன் ஆரம்ப நிகழ்வு, நேற்று (16) திருகோணமலை மாவட்டத்தின் வரோதயநகர், சல்லி, தம்பலகாமம், சின்னக்குளம், அம்மன்நகர், மூதூர் போன்ற கிராமங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில், உரிய கிராமங்களை சேர்ந்த மக்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், உல்லாசப்பயணிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பயிற்சிக் கருத்தரங்கு

■ ஏ.எம்.ஜலீல்

வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஜூன் மாதம் நடுப்பகுதியில் கண்டியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள், அகில இலங்கை இளம் எழுத்தாளர்கள் சம்மேளத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டுரை, கவிதை , சிறுகதை, உருவகக்கதை, எழுதுவது சமூக வலைத்தலங்கள் ஆகியனவற்றைப் பயன்படுத்துதல் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் மத்திய மாகாணத்தின் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய பிரதேசங்களிலுள்ள உயர்தரம் சித்தியெய்திய மாணவர், மாணவியர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம்.

தேவஹுவ நிஜாமுதீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வை, தேசிய அமைப்பாளர் ரசீட் எம் ரியாழ், எம்.காதிர்கான் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளனர்.

# வல்லவராகத் திகழும் 7 வயது சிறுமி



■ ரஞ்சித் ராஜபக்ஷ

மனித உடலின் சகல பாகங்களையும் படக்காட்சி மூலம் விளக்கிச் சொல்லும் பாடசாலை மாணவி ஒருவரைப் பற்றிய செய்தி பொகவந்தலாவையிலிருந்து எமக்குக் கிடைத்துள்ளது.

அவள் பெயர் சங்கர்தாஸ் கன்ஷிகா (வயது 07). பொகவந்தலாவ ஹோலிரோசரி தமிழ் மகா வித்தியாலயத்தில் இரண்டாம் தரத்தில் கல்வி கற்று வருகிறார்.

மனித உடலின் அனைத்து உறுப்புகளையும் சிறுவயதிலிருந்தே நன்கு அறிந்த சங்கரதாஸ் கன்ஷிகா, உலகின் அனைத்து நாடுகளையும் அவற்றின் தலைநகரங்களையும், இலங்கையின் அரச பரம்பரையையும், இலங்கையின் கொடியையும், சின்னத்தையும் படங்களின் மூலம் விளக்குவதில் வல்லவர்.

இவரது திறமை குறித்து கருத்து தெரிவித்த தந்தை தங்கராஜ் சங்கரதாஸ் மற்றும் தாய் பரமநாதன் பாமினி ஆகியோர் தங்களது மூத்த மகளுக்கு சிறுவயதிலிருந்தே நல்ல அறிவு இருந்ததாக தெரிவித்தனர்.

படங்களில் சித்திரிக்கப்பட்டவை குறித்து பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ அவருக்கு எந்தக் கல்வியும் வழங்கப்படவில்லை என்று அவரது பெற்றோர் கூறுகின்றனர்.

பௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்கு

# தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து போராட வேண்டும்

## கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் வேண்டுகோள்

■ பட்டிருப்பு நிருபர்

வடகிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கம் மற்றும் நில அபகரிப்புகளை தடுப்பதற்கு அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகள், தமக்கு இடையேயான கட்சி பேதங்களைக் கடந்து, ஒன்றிணைந்து போராட முன்வரவேண்டும் என கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேசலோகநாதன் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, நொச்சிமுனையில் உள்ள ஒன்றியத்தின் அலுவலகத்தில், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு நடைபெற்றது.



கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ லோகநாதன் குருக்கள் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு தென்னை மரத்துக்கு உயிர்நீர்த்தவர்களின் நினைவாக மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், படுகொலைசெய்யப்பட்ட மக்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனையும் அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேசலோகநாதன் குருக்கள், "முள்ளிவாய்க்கால் நினைவுவாரம் அனுஷ்டிக்கும் இந்த நேரத்தில், தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் தமிழ் தேசியத்தில் பற்றுக்கொண்டவர்களுக்கும் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம்.

தற்போது பௌத்தர்கள் இல்லாத இடங்களில் புதுசுபுதுசாக பௌத்த ஆலயங்கள் நிறுவப்படுகின்றன. இந்த நேரத்தில், தமிழ்த் தேசியம் சார்ந்த அனைவரும் கட்சி பேதங்களை மறந்து, எமது நிலத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது. ஆகவே, எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல், நில அபகரிப்புகளை தடுப்பதற்கு ஒன்றிணையவேண்டும். வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம். இதனை யாருக்கும் விட்டுக்கொடுக்க தயாரில்லை எனவும் தெரிவித்தார்.

# அதிகாரம் ஜனாதிபதியிடமா, மஹிந்தவிடமா? -செல்வம் எம்.பி கேள்வி

■ க. அகரன்

ஜனாதிபதி உத்தரவிட்ட பின்னரும், சில செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. உண்மையில், அதிகாரம் ஜனாதிபதியிடமா அல்லது மஹிந்தவிடமா என்ற சந்தேகம் எழுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற கிறிஸ்ரி குகராஜாவின் நினைவுதினத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது; வவுனியாவில் வாள்வெட்டு, கடத்தல் சம்பவங்கள், பணம்பறிப்பு, தற்கொலைகள் என்பன அதிகரித்துள்ளன. பொலிஸார் இருந்தும் வவுனியா மோசமான நிலையை அடைந்துள்ளது. பொலிஸாருக்கு பொறுப்பான அமைச்சர், வவுனியா மாவட்டம் மீது கவனம் செலுத்தி, சட்டம், ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.


இதேவேளை, நாடு முழுவதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகமாகி உள்ளன. எனவே, ஜனாதிபதி இதற்கான பதிலை

> “ வவுனியா மோசமான நிலையை அடைந்துள்ளது. பொலிஸாருக்கு பொறுப்பான அமைச்சர், வவுனியாவில் கவனம் செலுத்தி சட்டம், ஒழுங்கை பாதுகாக்க வேண்டும்

மக்களுக்கு சொல்லவேண்டும். முப்படைகளை களம் இறக்கி, மக்களை அச்சுறுத்துவது தவறான செயற்பாடகவே பார்க்கிறேன். அண்மையில், ஜனாதிபதியுடன் எமது சந்திப்பு இடம்பெற்றது. சில விடயங்கள் தொடர்பாக அவர் உத்தரவிட்ட பின்னரும், அதனை மீறும் செயற்பாடுகள் இடம்பெற்று இருக்கின்றன. வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடு வன்னியிலும் பரவலடைந்துள்ளது. எனவே, அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கிறதா அல்லது மஹிந்த ராஜபக்ஷர்களின் கைகளில் இந்தத் திணைக்களங்கள் இருக்கின்றனவா என்ற சந்தேகம் எங்களுக்கும் இருக்கின்றது.

எனவே, ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். மொட்டு கட்சியை காப்பாற்றும் செயற்பாட்டை அவர் மேற்கொண்டால், அவர் செய்யும் நற்செயல்களுக்கும் கெட்ட பெயரே ஏற்படும் என்றார்.

# அலிகம்பையில் சுகாதார மேம்பாடு



■ அபு அலா

அம்பாறை மாவட்டம், அலிகம்பை பிரதேச மக்கள் எதிர்நோக்கி வருகின்ற மருத்துவ தேவைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன் தலைமையிலான குழுவினர் விஜயமொன்றை மேற்கொண்டு, அப்பிரதேச சிவில் சமூகத்தினருடன் கலந்துரையாடினர்.

குறித்த பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்குவதற்கும், அம்மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும், தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாநோய்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

# குளவி கொட்டி பெண் உயிரிழப்பு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், நயினாதீவில் குளவி கொட்டுக்கு இலக்காகி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நயினாதீவு - 08ஆம் வட்டாரத்தில் திங்கட்கிழமை (15) இரண்டு பிள்ளைகளின் தாயான முஹமது றிலா சபானா என்பர் குளவி கொட்டுக்கு இலக்கானார். அவரை மீட்டு, வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பில் வாவியில்

# தோணி கவிழ்ந்ததில் உயிரிழப்பு

■ கனகராசா சரவணன்




மட்டக்களப்பு தனியார் விடுதிக்கு அருகிலுள்ள வாவியில், தோணியில் மீன்பிடிக்க சென்ற ஒருவர் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை (15) மாலை இடம்பெற்றதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை, பாண்டிருப்பு எல்லை வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய உதயராஜன் தனேஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர், வெளிநாட்டில் இருந்து வந்து கல்லடியில் திருமணம் முடித்து மூன்று மாதங்களான நிலையில், அடுத்தவாரம் வெளிநாட்டுக்கு திரும்பிச் செல்ல இருந்தார்.

சம்பவதினம் மனைவியின் உறவினர்கள் இருவருடன் சேர்ந்து கல்லடி வாவியில் தனியார் விடுதிக்கு முன்னால் தோணியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, தோணி கவிழ்ந்ததில் குறித்த நபர் நீரில் மூழ்கியதை அடுத்து, அவரைக் காப்பாற்றி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் கண்ணிவெடி அகற்றும்

# பெண் மீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்பகுதி ஒன்றில், கண்ணிவெடி அகற்றும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் குடும்ப பெண் ஒருவர், காடையர்களால் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரத்துக்கு முயன்ற சம்பவம் நேற்று முன்தினம் (15) பதிவாகியுள்ளது.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பெண் ஊழியர், காட்டுக்குள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை, சப்பாத்து அணிந்தும் முகம்களை மறைத்து, இறுகக் கட்டிய இரண்டு நபர்கள், குறித்த பெண்ணைக் காட்டுக்குள் கடத்திச்சென்று, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முயன்றவேளை, இருவரின் பிடியில் இருந்து அந்தப் பெண் தப்பித்து, வீதிக்கு வந்து, அங்கு பணியாற்றும் ஏனையவர்களை அழைத்துள்ளார்.

இந்நிலையில், குறித்த காட்டுப்பகுதியில் பெண்ணைக் கடத்திய இருவரும் தப்பிச் சென்ற நிலையில், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொக்கிளாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

# சர்வதேச நடிகர்களை குறிவைத்து ‘நேரத்தை வீணடிக்கும் தந்திரம்’

ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாவிடின், அப்பிரச்சினையை மூடி மறைக்க, மற்றுமொரு பிரச்சினை உருவாகும் வரைக்கும் சிலர் காத்திருப்பர்; இல்லையேல் வேண்டுமென்றே புதுப்புது பிரச்சினைகளை தோற்றுவித்துவிடுவர். அரசியலை பொறுத்தமட்டில் இந்தத் தந்திரம் பரவலாக பயன்படுத்தப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரையில், குழுக்களை அமைப்பதில் கைதேர்ந்தவர். அந்தக் குழுக்கள் ஆராய்ந்து அறிக்கையை தயாரிக்கும் முன்னர், புதுப்புது பிரச்சினைகள் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அவருடைய நடவடிக்கையும் இதே பாணியில்தான் நகர்த்தப்படுகின்றது.

புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் (2023 பெப்ரவரி 04) தீர்வு காணப்படுமென அறிவித்திருந்த ஜனாதிபதி, இவ்வருட இறுதிக்குள் தீர்வென காலத்தை நீட்டித்துவிட்டார். எனினும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் அமல்படுத்தப்படுமென கூறி, தென்னிலங்கையில் இருக்கும் 13க்கு எதிரானவர்களின் வாய்க்கு தீனியும் போட்டுவிட்டார்.

இதற்கிடையில்தான், வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்களை தனித்தனியாக சந்திக்க ஜனாதிபதி காய்நகர்த்தினார் அது கைகூடாமல் போகவே, அவ்விரு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் எம்.பிக்களை இறுதியாக மே.15 சந்தித்தார். அந்தப் பேச்சு தொடர்பில் கருத்துரைத்துள்ள தமிழ் எம். பிக்கள். “சர்வதேச நடிகர்களை குறிவைத்து ‘நேரத்தை வீணடிக்கும் தந்திரம்’ என விமர்சித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கும் தமிழ் தரப்புக்கும் இடையிலான பேச்சில் (மே.15) அதிகாரப் பகிர்வில் உறுதியான முடிவுகள் இல்லை. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமலாக்குவதில் இணக்கமில்லை. மாகாண சபைகள் தேர்தல்கள் தொடர்பிலும் முடிவு எட்டப்படவில்லை.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் முன்வைத்துள்ள இடைக்கால தீர்வு தொடர்பிலான யோசனைகளை ஆராய்வதற்கு குழு நியமிக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன் புதிய அரசியலமைப்பு தயாரிக்கும் போது கூடுதல் கவனம் செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்போது, தாங்கள் முன்வைத்திருக்கும் யோசனைகளில் எவ்விதமான மாற்றங்களும் செய்யப்படாதென தமிழ்த்தரப்பினர் இடித்துரைத்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என பகிரங்கமாக அறிவிப்பை விடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு, கிழக்கில் அடாத்தாக நிர்மாணிக்கப்படும் பௌத்த விகாரைகள் தொடர்பில் எவ்விதமான கருத்தையும் முன்வைக்கவில்லை. இது தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிடும் செயற்பாடாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூட விகாரைகள் விவகாரத்தில் மௌனம் கலையவில்லை. ஏனெனில், ரணில் பிரதமராக பதவிவகித்த நல்லாட்சி அமைச்சரவையில் அமைச்சராக இருந்த சஜித், வடக்கில் 1,000 விகாரைகளை நிர்மாணிப்பேன் என சூளுரைத்திருந்தார். அது அரங்கேற்றப்படுகின்றது.

அரசியல் நகர்வுகளை அவதானிக்குமிடத்து ஜனாதிபதி தேர்தலே முதலில் நடக்கும்போல தெரிகின்றது. விகாரைகள் தொடர்பில் கதைத்தால் சிங்கள-பௌத்த வாக்குகள் கிடைக்காமல் போய்விடுமென இருவரும் அஞ்சுகின்றனர். இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற கோஷத்துடன் தமிழர்களின் வாக்குகளை அள்ளிவளைத்து போட்டுக்கொள்ளவே, பேச்சு நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது என்பது மட்டுமே உண்மை.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மனிதர்கள் வாழும்போது செய்யும் கடமைகள், பல யுகங்களுக்கு தொடர்ந்தபடியே இருக்கின்றன.

ஒழுக்கம், பக்தி, கல்வித்திறன் போன்றவை தொடர்ந்து இயங்க வேண்டும். நற்கருமங்களை நிறுத்துதல் ஆகாது. தடைகளை உடைக்கத் தயக்கம் கூடாது. தொடர்ச்சியான அறிவு மேம்பாடு, பொது நலன்கள் மீதான ஈடுபாடுகள், பரந்த மனப்பான்மை என்பன, புவனத்தை மேல் நிலைக்கு இட்டுவைக்கும் வல்லமை மிக்கவை.

முயலாமல் முன்னேறுவது கடினம். எதையும் சும்மா பெறமுடியாது. குறுக்கு வழியில் எதையும் சாதிக்க முடியாது. நேர் வழி நீண்டதே; ஆனாலும், சிறப்பான வெற்றியை உண்டாக்கி விடும்.

போராடாமல் எவரும் வென்றதில்லை. எதிர்த்து நிற்பதுகூட, சுவாரஷ்யமானதுதான்! செயற்பாடுகள் தொடர்ந்து இயங்க வேண்டும்.

சில சமயங்களில் தோற்றாலும், அதனூடாக அனுபவங்கள் பெறப்படுகின்றன. கடமை செய்வதில் அடையும் திருப்தி, மனதைச் சாந்தப்படுத்துகின்றது. முன்னேறுவது என்பது, முடிவில்லாமல் இயங்குவதேயாகும். உணர்க!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முதலீட்டாளர்களை அடித்து விரட்டும் நாடு



எம்.எஸ்.எம் ஐயூப்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓரளவுக்காவது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறார் என்பதையும் பொதுஜன பெரமுன இன்னமும் திருந்தவில்லை என்பதையுமே, கட்டானையில் உள்ள ஓமான் நாட்டவருக்குச் சொந்தமான ஆடை உற்பத்தித் தொழிற்சாலை மீதான தாக்குதல் எடுத்துக் காட்டுகிறது.

கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. அன்றிலிருந்து ஒன்றரை மாதம் சென்றுள்ள போதிலும், பொலிஸார் தாக்குதலை நடத்திய குண்டர்களை இன்னமும் கைது செய்யவில்லை.

இலங்கையின் பொலிஸார் திறமையற்றவர்கள் அல்லர். எந்தவொரு குற்றச் செயலும் இடம்பெற்று, சில நாள்களில் குற்றவாளிகளை கண்டுபிடித்து, கைது செய்வர். ஆனால், அவர்கள் சில சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளை கைது செய்ய முற்படுவதில்லை. ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பின்புலத்தில் இருந்து நடத்திய குற்றச் செயல்கள், சிறுபான்மையினருக்கு எதிராக பெரும்பான்மையினர் நடத்திய குற்றச் செயல்கள், ஏழை மக்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் போன்றவற்றை செய்தவர்களைக் கைது செய்ய அவர்கள் அக்கறை செலுத்துவதில்லை.

சிறுபான்மையினருக்கு எதிராகவும் ஏழைகளுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள், ஊடகங்களில் பெரிதாக இடம்பிடித்துக் கொண்டால் சிலவேளை, பொலிஸார் சற்றுத் துணிந்து செயலாற்றுவர். ஆயினும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பின்புலத்தில் இருந்து செய்த குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய, அவர்கள் துணியவே மாட்டார்கள். ஊடக பிரசாரத்தின் காரணமாக அவ்வாறு சந்தேக நபர்களை கைது செய்தாலும், குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளும் வகையிலேயே சட்ட நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

இதனால் தான், திருகோணமலையில் ஐந்து மாணவர்களைப் படுகொலை செய்த சம்பவம், ரவிராஜ் கொலைச் சம்பவம், ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலைச் சம்பவம் போன்றவற்றில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. அதனாலேயே, 2014ஆம் ஆண்டு பேருவளை பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களின் போதும், 2019ஆம் ஆண்டு மினுவாங்கொடையை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களின் போதும் கொல்லப்பட்டவர்கள் விடயத்தில் நீதி வழங்கப்படவில்லை.

கட்டான ஆடைத் தொழிற்சாலை மீதான தாக்குதலை நடத்தியவர்கள் கைது செய்யப்படாதிருப்பதற்கும் அதுவே தான் காரணம். கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதியே அதன் பின்னால் உள்ளார் என்று ஊடகங்கள் பரவலாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால், தாக்குதல் நடத்திய குண்டர்களை கைது செய்யாது, தொழிற்சாலையை கட்டானையில் இருந்து, வேறு பகுதிக்கு எடுத்துச் செல்வதையே அரசாங்கம் ஊக்குவிக்கிறது; இது ஒரு கேவலமான நிலைமையாகும்.

‘அல் ஒபைதானி’ என்ற பெயரிலான இந்த ஆடை உற்பத்தி தொழிற்சாலை மீதான தாக்குதலை, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவின் கையாட்களே நடத்தியுள்ளார்கள் என்று கடந்த வாரம், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறப்பினர் நளின் பண்டார, பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதை இந்திக்க அநுருத்த மறுத்தாலும், அவரது மறுப்பை எத்தனை பேர் ஏற்றுக் கொண்டார்கள் என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

கட்டானையில் அமைந்துள்ள ‘அல் ஒபைதானி’ நிறுவனம், ஓமான் நாட்டிலுள்ள பல்தேசிய நிறுவனம் ஒன்றின் கிளையாகும். கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி, ஐந்து பேரைக் கொண்ட கும்பல், திடீரென நிறுவன வளாகத்துக்குள் புகுந்து, முதலில் அதன் பாதுகாப்பு அதிகாரிகளை தாக்கியுள்ளது. அதையடுத்து, அதே வளவில் அமைந்த அதன் உரிமையாளரின் விடுதிக்குள் புகுந்து, உரிமையாளரையும் கடுமையாகத் தாக்கியுள்ளது. மிரட்டி, கப்பம் கறப்பதே அவர்களது நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.

சம்பவம் இடம்பெற்று ஆறு நாள்களுக்குப் பின்னர், ஏப்ரல் ஐந்தாம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய முதலீட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, இத்தாக்குதலில் ஈடுபட்டோரை விரைவில் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தவதாகக் கூறினார். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு இருந்த பொலிஸாரின் விசாரணைகளைப் பற்றி, தாம் திருப்தி அடையவில்லை என்றும் எனவே, விசாரணைகளை இரகசியப் பொலிஸாரிடம் கையளிப்பதாகவும் அவர் அப்போது கூறினார்.

இந்த நிறுவனத்தில் நிச்சயமாக சி.சி. ரி.வி பொருத்தப்பட்டு இருக்கும். எனவே, தாக்குதல் நடத்த வந்தவர்களை அடையாளம் காண்பது அவ்வளவு சிரமமாக இருக்காது. அவர்கள் முகமூடி அணிந்து வந்ததாகவே கூறப்படுகிறது. ஆயினும் அவர்களைக் கைது செய்ய, பொலிஸார் இவ்வளவு நாள்கள் தாமதிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

தாக்குதல் நடத்தப்பட்ட உடனேயே, நிறுவன உரிமையாளர் நிறுவனத்தை மூடிவிட்டு, நாடு திரும்ப முடிவு செய்ததாக செய்திகள் கூறின. உண்மையிலேயே பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என்று தெரிந்தால், அவர் வேறு என்ன தான் செய்ய முடியும்? நிறுவன உரிமையாளர் நாடு திரும்பத் தயாராகி வருவதாக, கடந்த வாரம் செய்திகள் கூறின. அப்போது தாக்குதல் இடம்பெற்று சுமார் ஐந்து வாரங்கள் உருண்டோடிவிட்டிருந்தன.

அப்போது தான் இந்நாட்டுத் தலைவர்களுக்கு நிலைமையின் பாரதூரத்தன்மை விளங்கியது போலும்! எனவே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், ‘அல் ஒபைதானி’ நிறுவனத்தின் அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தி, நிறுவனத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதாக கூறியிருக்கிறார்.

அதன் பிரகாரம், நிறுவன உரிமையாளர் நாடு திரும்பும் யோசனையை கைவிட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. எனினும், தமது நிறுவனத்தைத் தொடர்ந்தும் கட்டானையில் நடத்துவதா அல்லது நாட்டில் மற்றொரு பிரதேசத்துக்கு எடுத்துச் செல்வதா என்பதை, தமது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவு செய்வதாகவும் அவர் அமைச்சரிடம் தெரிவித்து இருந்தார்.

மற்றொரு பிரதேசத்துக்கு நிறுவனத்தை எடுத்துச் செல்வதா என்று அவர் யோசிப்பது, அவர் அமைச்சரின் பாதுகாப்பு உத்தரவாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. தம்மைத் தாக்கியவர்கள் பலம்வாய்ந்தவர்கள் என்பதை, ஓமான் நாட்டுக்காரர் அறிந்துள்ளார் என்பதையும் அது காட்டுகிறது.

இந்நிறுவனம், இலங்கை முதலீட்டுச் சபையின் கீழேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாக முதலீட்டுச் சபையும் கடந்த ஒன்பதாம் திகதி கூறியது. 10ஆம் திகதி அறிக்கையொன்றை வெளியிட்ட முதலீட்டுச் சபை, ‘இந்த ஆடை உற்பத்தித் தொழிற்சாலையை, மற்றொரு பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்வதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது’ எனவும் குறிப்பிட்டிருந்தது.

நளின் பண்டார எம்.பி, இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவைப் பற்றிக் குறிப்பட்ட கருத்து பிழையாக இருக்கலாம். ஆனால், நிச்சயமாக கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர், இத்தாக்குதலின் பின்னால் இருந்தார் என்பதை, இப்போது சகலரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆயினும் அந்த அரசியல்வாதியையோ அவரது குண்டர்களையோ கைது செய்ய, பொலிஸாரால் இன்னமும் முடியவில்லை.

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகள் அத்தியாவசியமாக இருக்கும் நிலையிலேயே, மிகவும் முக்கியமானதொரு முதலீட்டாளர் மீதான இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கு உதவ முன்வந்துள்ள போதிலும், அதன் மூலம் நாடு தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நிச்சயமாக மீளும் என்ற உத்தரவாதம் இல்லை.

ஏற்கெனவே பெற்ற கடனை செலுத்த முடியாமலும், அதனால் மேலும் கடன் பெற முடியாமலும் இருந்த இலங்கைக்கு, மேலும் கடன் பெற நாணய நிதியம் வாய்ப்பளித்துள்ளது. அத்தோடு நாட்டுக்குள் இருந்து வரிகள் மூலமும் அரச வர்த்தக நிறுவனங்களை விற்றும் பணத்தை பெற்று, அரச நிதி நிலைமையை பலப்படுத்திக் கொள்ள ஆலோசனை வழங்கியுள்ளது. ஆயினும், நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டமோ அல்லது வெளிநாட்டு செலாவணியை பெருக்கும் திட்டமோ நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் இல்லை.

உள்நாட்டு உற்பத்திகளை பெருக்கியும் வெளிநாடுகளுக்கு தேவையான தொழில்நுட்ப சேவைகளை வலுப்படுத்தியும், நாட்டை பொருளாதார ரீதியாக வளப்படுத்தும் திட்டத்தை அரசாங்கமே வகுக்க வேண்டும். அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் அத்தியாவசியமாகும். ஆனால், இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திருப்தியடையும் சூழ்நிலைமை இருக்கிறதா என்பது கேள்விக்குறியாகும்.

30,000 தொழில் வாய்ப்புகளை வழங்கக்கூடிய 19 தொழிற்சாலைகளை இலங்கையில் ஆரம்பிக்க அனுமதி கேட்டு, கடந்த எட்டு ஆண்டுகளாக 20 முறைக்கு மேல் இலங்கைக்கு வந்துள்ளதாக கொரிய முதலீட்டாளர் ஒருவர், கடந்த வாரம் ‘டெய்லி மிரர்’ பத்திரிகையில் வெளியான கட்டுரையில் குறிப்பிட்டு இருந்தார். தாம் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இலஞ்சம் வழங்காமையே இதற்குக் காரணம் என்பதை அவர் அதில் சூசகமாக குறிப்பிட்டு இருந்தார்.

அண்மையில், ‘டெய்லி மிரர்’ பத்திரிகையுடனான நேர்காணல் ஒன்றில், முதலீடுகளைப் பற்றிக் குறிப்பிட்ட அவுஸ்திரேலிய தூதவர் போல் ஸ்டீவன்ஸ், அவுஸ்திரேலிய முதலீடுகளுக்கு இலங்கையில் அனுமதி பெறுவது கடினமாக இருக்கிறது என்று கூறியிருந்தார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ‘2020 Investment Climate Statements: Sri Lanka’ என்ற அறிக்கையிலும் அமெரிக்க முதலீட்டாளர் தொடர்பில் இதே கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டை, மறுசுழற்சி செய்வதற்காக அதன் ஆரம்பத்திலிருந்து 108 முதலீட்டாளர்கள் வந்துள்ளதாகவும் ஆனால், அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அவர்களிடம் இலஞ்சம் கேட்டதால் அவர்கள் திரும்பிச் சென்றதாகவும் அப்போதைய அரச நிறுவனங்கள் தொடர்பான குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்னெத்தி, அக்குப்பை மேடு சரிந்த நாள்களில் கூறியிருந்தார்.

இந்த இலஞ்சப் பேர்வழிகள், முதலீட்டாளர்களை வரவிடுவதுமில்லை; வந்தவர்களையும் அடித்து விரட்டவும் முயல்கிறார்கள். நாடு உருப்படுமா?

## கடிதங்கள்

### ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் குழிகள்

## பயணிகளும் பாதசாரிகளுடம் அவதி

மத்திய மலைநாட்டில், கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக, நகர்ப்புறங்களில் எங்கும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

குறிப்பாக, ஹட்டன் நகரில் உள்ள பிரதான பஸ் தரிப்பிடத்தில் காணப்படும் பாரிய குழியில் மழைநீர் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள், மாணவிகள், பயணிகள், நடத்துநர்கள், சாரதிகள் எனச் சகலரும் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது குறித்து, சம்பந்தப்பட்ட ஹட்டன் நகர சபை, தனியார், போக்குவரத்து சபை ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக, இந்தப் பஸ் தரிப்பிடம் செப்பனிடபடவில்லை. நாளாந்தம் இந்தத் தரிப்பிடத்தில் இருந்து கொழும்பு, கண்டி, கதிர்காமம், யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், கம்பளை, நாவலப்பிட்டி, கினிக்கத்தேன, டயகம, நுவரெலியா, பலாங்கொட, எம்பிலிபிட்டி, சாமிமலை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு, தனியார் - அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் பஸ் தரிப்பிடம் முழுமையாகச் செப்பனிடப்பட வேண்டும் என பாதிக்கப்படும் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

செ.தி பெருமாள்



## அமைச்சரவை முடிவுகளில் சில...




### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (15) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில...

**பாடலை தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தல்**

1903 ஆம் ஆண்டில் முதுபெரும் எழுத்தாளர் ஜோன் டி சில்வாவால் எழுதப்பட்டு, விஸ்வநாத் லவ்ஜினால் இசையமைக்கப்பட்டு, சிறிசங்கபோ பாடல் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டு தற்போது 120 ஆண்டுகள் பழைமை வாய்ந்த 'தன்னோ புதுன்கே ஶ்ரீ தர்மாஸ்கந்தா' எனும் பாடலை தேசிய மரபுரிமைப் பாடலாக பெயரிடுவது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

எமது நாட்டின் தேசிய கீதம் பயன்பாட்டுக்கு வரும் வரைக்கும் வைபவங்களிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் இப்பாடல் தேசிய கீதத்திற்கு சமமாகப் பயன்படுத்திய சான்றுகள் காணப்படுகின்றன. இப்பாடல் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக தேசத்தின் இரசனையிலும் சிந்தனையிலும் தொடர்ச்சியாக பங்காற்றியமையைக் கருத்தில் கொண்டு, 'தன்னோ புதுன்கே ஶ்ரீ தர்மாஸ்கந்தா' எனும் பாடலை தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**அரச தொழில் முயற்சி மீள்கட்டமைப்புக் கொள்கை**

அரச தொழில் முயற்சிகளை மீள்கட்டமைப்பு பற்றித் தேவையான வழிகாட்டல்களையும் ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ், அரச தொழில் முயற்சி மீள்கட்டமைப்பு அலகை நிறுவுவதற்காக 2022.09.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச தொழில் முயற்சிகளால் விநியோகிக்கப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் தரப்பண்பு, விலை மற்றும் அணுகலை அதிகரித்தல், குறித்த தொழில் முயற்சிகளால் திறைசேரிக்குக் கொடுக்கப்படும் நிதி அழுத்தத்தைக் நீக்குதல் மற்றும் தனிப்பட்ட முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்காக போட்டித்தன்மையான மற்றும் சந்தையை அடிப்படையாகக் கொண்ட வியாபாரச் சூழலை உருவாக்கும் நோக்கில் அரச தொழில் முயற்சி மீள்கட்டமைப்புக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**கைத்தொழில் கண்காட்சி வாரம் பிரகடனம்**

2030 ஆம் ஆண்டாகும் போது, தற்போது 28 சதவீதமாகவுள்ள மொத்தத் தேசிய உற்பத்தியை 30 சதவீதமாகவும், தற்போது மொத்த தேசிய உற்பத்திக்கு 15 சதவீதமான உற்பத்திக் கைத்தொழில் பங்களிப்பை 25 சதவீதமாகவும் அதிகரிப்பதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தற்போது 2.8 சமவீதமான தொழில்முயற்சியாளர்களின் பங்களிப்பை 10 சதவீதமாகவும், மொத்தத் தேசிய உற்பத்திக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் பங்களிப்பு 52 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரைக்கும் 2030 ஆம் ஆண்டாகும் போது அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த இலக்கை அடைவதற்காக 06 கைத்தொழில் துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

உள்ளூர் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கும் ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்றுறையினரைக் கவர்ந்திழுக்கும் நோக்கில் வருடாந்த கைத்தொழில் கண்காட்சியை ஒருவார காலத்திற்கு நடத்துவதற்காகவும், அதன் ஆரம்பப் படிமுறையாக குறித்த கண்காட்சியை இவ்வாண்டில் ஜூன் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடத்துவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**யூரியா உரத்தை இறக்குமதி செய்தல்**

2023 சிறுபோகச் செய்கைக்காக இரண்டு அரச உரக் கம்பனிகள் மற்றும் தனியார் துறையினரிடம் காணப்படுகின்ற யூரியா உரத்தின் அளவு மற்றும் கமநல சேவைகள் நிலையங்களில் எஞ்சியுள்ள தொகையைக் கருத்தில் கொள்ளும் போது, 25,000 மெற்றிக்தொன் யூரியா உரம் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, லங்கா உரக் கம்பனி மூலமாக 60 சதவீதமும், வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக்கம்பனி மூலமாக 40 சதவீதமுமாக குறித்த உரத்தின் அளவை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**கப்பலொன்றை வாடகைக்குப் பெறல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பராமரிப்பு மற்றும் துரித பதிலளிப்புக் கப்பலொன்றை சர்வதேச போட்டி விலைமனுக் கோரல் முறையைப் பின்பற்றி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2022.11.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய 2023.06.01 தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு வாடகை அடிப்படையில் பராமரிப்பு மற்றும் துரித பதிலளிப்புக் கப்பலொன்றை பணியில் அமர்த்துவதற்கான ஒப்பந்தம் செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**இலத்திரனியல் வாகன இறக்குமதிக்கு அங்கிகாரம்**

புலம்பெயர் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் ஈட்டுகின்ற வருமானம் சட்டபூர்வமான வழிமுறைகள் மூலம் எமது நாட்டுக்குப் பண அனுப்பல்களை ஊக்குவிக்கும் நோக்கில், புலம்பெயர் தொழில்களில் ஈடுபடுகின்ற இலங்கையர்களுக்கு இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இதற்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலத்திரனியல் வாகனத்தை இறக்குமதி செய்வதற்காக புலம்பெயர் தொழிலாளர்கள் 2022.05.01 தொடக்கம் 2022.12.31 வரையான காலப்பகுதியில் அவர்கள் எமது நாட்டுக்கு அனுப்பியுள்ள வெளிநாட்டு செலாவணியின் தொகை அடிப்படையாகக் கொள்ளப்படும். ஆனாலும், குறித்த காலப்பகுதியில் அனுப்பப்பட்டுள்ள வெளிநாட்டு செலாவணியின் தொகைக்கமைய, அவர்கள் எதிர்பார்க்கின்ற இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு இருக்கவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், குறித்த உத்தேச திட்டத்தின் கீழ் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக எமது நாட்டுக்கு அனுப்பியுள்ள வெளிநாட்டு செலாவணித் தொகையைக் கணிக்கும் காலப்பகுதியை 2023.09.15 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 'ரணவிரு சமரும்'

ஊவா மாகாண படைவீரர் தினம் 'ரணவிரு சமரும்' நிகழ்வு, பதுளையில் உள்ள ஊவா மாகாண படைவீரர் தூபிக்கு அருகாமையில், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் தலைமையில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றது.

எம். செல்வராஜா





## முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து, முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி பரிமாறும் நிகழ்வு, வடக்கு - கிழக்கின் பல பகுதிகளில் இடம்பெற்றன.


எப். முபாரக், நிதர்சன் வினோத்

### குறிகாட்டுவான்




### சல்லி





## புகைப்படங்கள் காட்சி...

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு, அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்தும் மே 18 முள்ளிவாய்க்கால் பேரவலத்து நினைவுப் பதாகைகள், புகைப்படங்கள் என்பன, பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய நுழைவாயில் பிரதான வீதிக்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டன.

வருகை தந்த பாடசாலை மாணவர்கள், நினைவு புகைப்படங்களை பார்வையிட்டதுடன் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், மாணவர்கள் மத்தியில் நினைவு உரையை நிகழ்த்தினார்.

ஏ.எல்.எம் ஷினாஸ்





### அக்கரைப்பற்று தேசிய பாடசாலை





## டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம்

அதிகரித்து வரும் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு ஆகியவற்றின் அறிவுறுத்தலக்கு அமைவாக, விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

வி.ரி சகாதேவராஜா, எம்.ஏ றமீஸ், ஹஸ்பர், ஒலுமுதீன் கியாஸ்,

### கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயம்






### நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம்





### தம்பலகாமம் பிரதேச செயலகம்





## கௌரவிப்பு...

வலப்பனை கல்வி வலையத்துக்கு உட்பட்ட இராகலை கிருஸ்ணன் மாதிரி பாடசாலையின் தரம் ஐந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இராகலை ஜெமினி வரவேற்பு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (16) காலை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஆர். விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வலப்பனை கோட்ட கல்வி பணிப்பாளர் டி.எம்.எம்.பி திஸாநாயக்கா, தமிழ்க் கல்வி பணிப்பாளர் வீ. யோகராஜா உள்ளிட்ட உதவி கல்வி பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், வங்கி முகாமையாளர்கள், வர்த்தகர்கள் எனப் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டு பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

ஆ. ரமேஸ்





விழுப்புரம்

# கள்ளச்சாராயம் குடித்தவர்களுக்கு ஆறுதல்

கள்ளச்சாராயம் குடித்ததில் 14 பேர் உயிரிழந்த சம்பவம் அண்மையில் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகே இடம்பெற்றுள்ளது.

மேலும் அரச வைத்தியசாலையில் 40க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றும் வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை நேற்றுமுன்தினம் தமிழக முதலமைச்சர் நேரில் சென்று நலம் விசாரித்தார்.

இந்நிலையில், கள்ளச்சாராயம் குடித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித்தலைவருமான எடப்பாடி பழனிசாமி நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.



அப்போது, சிகிச்சை பெற்றுவருபவர்களின் உடல்நிலை குறித்து கேட்டறிந்த அவர், அவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு, வைத்தியசாலையில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் மருத்துவரிடம் கேட்டறிந்தார். மேலும், அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கவேண்டும் என்றும் மருத்துவர்களிடம் கூறினார்.

விழுப்புரம்



## சத்துணவில் சர்க்கரைப் பொங்கல்

சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளன்று இனிப்பு பொங்கல் வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரச பாடசாலைகளில் சத்துணவுத் திட்டத்தில் பயனடைந்து வரும் குழந்தைகளுக்கு ஏற்கெனவே, முன்னாள் முதலமைச்சர்கள் காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரது பிறந்த நாளன்று இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று, கருணாநிதி பிறந்த நாளன்றும் இனிப்புப் பொங்கல் வழங்கப்படும் என கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி சட்டப்பேரவையில் அமைச்சர் கீதா ஜீவன் அறிவித்திருந்தார்.

அதன்படி, அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலை மாணவர்களுக்கு ஜூன் 3ஆம் திகதி, இனிப்புப் பொங்கல் வழங்கப்படும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தாய்லாந்து

## இராணுவ ஆதரவு கட்சிகளை வீழ்த்திய எதிர்க்கட்சிகள்

தாய்லாந்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

தாய்லாந்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி 2014ஆம் ஆண்டு இராணுவத்தால் கலைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தாய்லாந்தின் முன்னாள் இராணுவ தளபதி பிரயுத் சான் ஈ சா அந்நாட்டின் பிரதமராக இருந்து வந்தார்.

இவரது தலைமையிலான இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், மன்னர் முறைக்கு எதிராகவும் அந்நாட்டு இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து மே 14 ஆம் திகதி தாய்லாந்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இதில், பிரதான எதிர்க்கட்சியான ஃபோர்வர்ட் கட்சியின் தலைவர் பிடா லிம்ஜாரோ என்ரட்டா பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். 41 வயது தொழிலதிபரான அவருக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது.

இந்நிலையில் தேர்தலில் பதிவான வாக்குகள் திங்கட்கிழமை எண்ணப்பட்ட நிலையில் இராணுவ ஆதரவு கட்சிகளை எதிர்க்கட்சிகள் விழ்த்தியுள்ளன. 500 உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் சபையில்,



எதிர்க்கட்சிகளான ஃபோர்வர்ட் கட்சியும், பியூ தாய் கட்சியும் சுமார் 286 இடங்களை வென்றுள்ளன.

இதில் 147 இடங்களை ஃபோர்வர்ட் கட்சி பெற்றுள்ளது. மேலும், சில கட்சிகளின் ஆதரவுடன் ஃபோர்வர்ட் கட்சி ஆட்சி அமைக்கும் என்றும் பிடா லிம்ஜாரோ என்ரட்டா பிரதமராகப் பதவி ஏற்பார் என்றும் கூறப்படுகிறது.

இத் தேர்தலில் தாய்லாந்து இராணுவத்தின் ஆதரவு பெற்ற ஆளும் கூட்டணியில் உள்ள இரண்டு கட்சிகள் வெறும் 15% வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த சில வருடங்களாகவே ஃ போர்வர்ட் கட்சிக்கு இளைஞர்களிடம் தீவிரமான ஆதரவு இருந்து வந்ததாகவும், அது பொதுத் தேர்தலிலும் எதிரொலித்துள்ளதாகவும் அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் முடிவை அடுத்து, 9 ஆண்டுகளுக்குப் பிறகு இராணுவ ஆட்சி இல்லாத ஜனநாயக முறையிலான ஆட்சி தாய்லாந்தில் அமையவுள்ளது.

அமெரிக்கா

## திருடனைப் பிடித்து கொடுத்த மாடுகள்

அமெரிக்காவில் திருடனைப் பிடிக்கப் பொலிஸாருக்கு மாடுகள் உதவியுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் வடக்கு கரோலினா பகுதியில் கார் ஒன்றை மர்ம நபர் திருடி சென்றுள்ளார்.

அவரைப் பின்தொடர்ந்து பொலிஸாரும் சென்றனர். ஆனால், அவர் எங்கோ சென்று மறைந்திருந்துள்ளார். இதனால் அந்தப் புல்வெளி பகுதியில் அவர் எங்கு இருக்கிறார் எனப் பொலிஸார் குழம்பிப் போய் இருந்தனர். அப்போது அங்கு மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் ஓடிச் சென்று, ஒரு புதர் அருகே நின்றுள்ளன. இதனைக் கண்டு சந்தேகம் அடைந்த பொலிஸார் அங்கு சென்று பார்த்தபோது அங்கு அந்த மர்ம நபர் மறைந்திருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்த பொலிஸார் இச்சம்பவம் குறித்து தமது முகப் புத்தகத்திலும் பகிர்ந்துள்ளனர்.

பிரான்ஸ்

## மக்ரோனுடன் கைகோர்த்த எலோன் மஸ்க்

உலகின் மிகப்பெரும் செல்வந்தரும், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க், பிரான்ஸின் ஜனாதிபதி இமானுவல் மேக்ரோனை பாரிஸில் சந்தித்து முதலீடுகள் தொடர்பாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரான்சில் தொழில்களுக்கு முதலீடு செய்வதை ஊக்குவிக்க அந்நாட்டு ஜனாதிபதி மேக்ரோன் சிறப்பு மாநாடுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக எலோன் மஸ்க்கை



அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஒருமணி நேரம் நீடித்த இச்சந்திப்பில் நேர்மையான அணுகுமுறையுடன் இருவரும் பேச்சுநடத்தியதாகவும், மிகவும் வெளிப்படையாக இருந்ததாகவும் பிரான்ஸ் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## பாபிக்குப் பிறந்தநாள்

உலகின் வயதான நாய் என கின்னஸ் சாதனை படைத்த பாபிக்கு அண்மையில் 32ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. கால்நடைகளை ஓநாய்களிடமிருந்து பாதுகாப்பதற்காக வளர்க்கப்படும் “ரஃபெய்ரோ அலண்டெஜோ’ இனத்தை சேர்ந்த இந்த நாய், போர்த்துக்கலின் லெய்ரா மாவட்டத்தில் வசித்துவருகின்றது. 32 வயதான போதும் பாபி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாக அதனை பராமரித்துவரும் லியோனல் கோஸ்டா தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து

## விடுதியில் 10 பேர் உயிரிழப்பு

நியூசிலாந்தின் தலைநகரம் வெலிங்டனில் நான்கு மாடிகள் கொண்ட விடுதியொன்றில் நேற்றைய தினம் எதிர்பாராதவிதமாக தீ விபத்து ஏற்பட்டது.

இத்தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் பலர்



சிக்கியுள்ளதால் பலி எண்ணிக்கை உயரலாம் எனவும் மீட்புக்குழுவினர் தெரிவித்தனர்.

# ஐ.பி.எல்: வெளியேற்றப்பட்ட சண்றைசர்ஸ் ஹைதரபாத்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரிலிருந்து சண்றைசர்ஸ் ஹைதரபாத் வெளியேற்றப்பட்டுள்ளது.

அஹமதாபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸுடனான போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து ஹைதரபாத் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:
நாணயச் சுழற்சி: ஹைதரபாத்
குஜராத்: 188/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 101 (58), சாய் சுதர்சன் 47 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 5/30 [4], தங்கராசு நடராஜன் 1/34 [4])
ஹைதரபாத்: 154/9 (20 ஓவ.)




(துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 64 (44) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் ஷமி 4/21 [4], மோஹித் ஷர்மா 4/28 [4], யஷ் டயால் 1/31 [4], ரஷீட் கான் 0/28 [4], ராகுல் டெவாட்டியா 0/7 [1.1])

போட்டியின் நாயகன்: ஷுப்மன் கில். இந்நிலையில் தரம்சாலாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை பஞ்சாப் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லெய்செஸ்டரை வென்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக கேர்ட்டிஸ் ஜோன்ஸ் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, ட்ரெண்ட் அலெக்ஸான்டர்-அர்னோல்ட் ஒரு கோலையும் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 85 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகிறது. 81 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், அதே புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில் ஏனைய அணிகளை விட ஆர்சனல் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

### அயர்லாந்துக்கெதிரான டெஸ்டுக்கான

## இங்கிலாந்து குழாமில் பெயார்ஸ்டோ; போக்ஸ் நீக்கம்

அயர்லாந்துக்கெதிரான டெஸ்டுக்கான இங்கிலாந்துக் குழாமில் ஜொனி பெயார்ஸ்டோ இடம்பெற்றுள்ள நிலையில், பென் போக்ஸ் இடம்பெறவில்லை.

இந்நிலையில் உபாதைக்குள்ளான ஜேம்ஸ் அன்டர்சன் குழாமில் இடம்பெற்றுள்ளதோடு, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்டும் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: பென் ஸ்டோக்ஸ் (அணித்தலைவர்), ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயார்ஸ்டோ, ஸ்டூவர்ட் ப்ரோட், ஹரி ப்ரூக், ஸக் குறொலி, பென் டக்கெட், டான் லோரன்ஸ், ஜேக் லீச், ஒலி போப், மத்தியூ பொட்ஸ், ஒலி றொபின்சன், ஜோ றூட், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.



### காரைதீவு விளையாட்டுக் கழகத்தின்

## கிரிக்கெட் சீருடை வெளியிட்டு வைபவம்

காரைதீவு சகா

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் அணியினருக்கான புதிய சீருடை வெளியீட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது கிரிக்கெட் அணித் தலைவர் பி. சுலக்சன் உள்ளிட்ட வீரர்களுக்கு சீருடை வழங்கி வைக்கப்பட்டது.




### அகில இலங்கை பூப்பந்தாட்டத் தொடர்:

## சம்பியனான லோசன், நதீஸா

எஸ். கே. குமார்

நுவரெலியா பூப்பந்தாட்டச் சங்கமும் மத்திய மாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நுவரெலியா மாநகர சபை உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடத்திய அகில இலங்கை ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான திறந்த போட்டியில் லோசனும், பெண்களுக்கான திறந்த போட்டியில் நதீஸாவும் சம்பியனாகினர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 17 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.